நாங்குநேரி சம்பவம் மாணவர்களிடம் கூட சாதிய நச்சு ஊடுருவலை காட்டுகிறது!

# மாணவர்கள் மனதில் சமூக நல்லுறவை விதைப்பதை அனைவரும் கடமையாகக் கொள்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக.13-

நாங்குநேரியில் நடந்த சம்பவம் நடுக்கத்தை ஏற்படுத்துகிறது என்றும், இளம் மாணவர்களிடம் கூட சாதிய நச்சு ஊடுருவி இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது என்று குறிப்பிட்ட முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாணவர்கள் மனதில் சமூக நல்லுறவை விதைப்பதை அனைவரும் கடமையாகக் கொள்வோம் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:

நாங்குநேரியில் நடந்த சம்பவம் நடுக்கத்தை ஏற்படுத்துகிறது. இளம் மாணவர்களிடம் கூட சாதிய நச்சு எந்தளவுக்கு ஊடுருவி இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது. சக மனிதரை நமக்குச் சமமான ஒருவராக அடையாளம் காணாமல் சாதி வேறுபாடும் மாறுபாடும் பார்த்து வெறுப்பதும், அத்தகைய வெறுப்பை வன்முறையாக வெளிப்படுத்துவதும் இன்னும் தொடர்வது சகிக்க முடியாததாக இருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் கொடூரமாகத் தாக்கப்பட்ட மாணவர்களின் மருத்துவம் மற்றும் கல்விச் செலவை ஏற்க இருப்பதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவித்திருக்கிறார். குற்றச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். சட்டம் அதன் கடமையைச் சரியாகச் செய்யும்.

அதே நேரத்தில் மாணவர்கள் மனதில் சமூக நல்லுறவை விதைப்பதை அனைவரும் கடமையாகக் கொள்வோம். குறிப்பாக ஆசிரியர் சமூகமானது, இது போன்ற நன்னெறிகளை ஊட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். வெறுப்பு மனம் கொண்டவர்களால் எந்த வெற்றியையும் அடைய முடியாது. பேசும் மொழியால் நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள்! நமக்குள் வெறுப்புணர்வும் ஏற்றத் தாழ்வு எண்ணமும் கூடாது என்பதை இளைய சமுதாயம் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

எமது அடையாளத்தை அழித்து

# இந்தியை முன்னிறுத்தும் பா.ஜ.க. முயற்சி உறுதியோடு எதிர்க்கப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

சென்னை, ஆக.13–

எமது அடையாளத்தை அழித்து இந்தியை முன்னிறுத்தும் பா.ஜ.க.வின் முயற்சிகள் உறுதியோடு எதிர்க்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

காலனியாக்கத்தின் தளைகளில் இருந்து விடுவிக்கிறோம் என்ற பெயரில் செய்யப்படும் மறுகாலனியாக்கம்.

பாரதீய நியாய சன்ஹிதா, பாரதீய நாகரிக் சன்ஹிதா, பாரதீய சாக்ஷ்ய சன்ஹிதா என்ற பெயர்களில் ஒன்றிய பா.ஜ.க அரசு ஒட்டுமொத்தமாக மாற்றிக் கொண்டுவந்துள்ள சட்ட வரைவுகளில் மொழியாதிக்கத்தின் முடைநாற்றம் எடுக்கின்றது.

இது இந்தியாவின் பன்முகத் தன்மையைச் சிதைக்கும் அராஜக முயற்சி ஆகும். இந்திய ஒற்றுமையின் அடிப்படையையே இது அவமதிக்கிறது. பாரதீய ஜனதா கட்சிக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இனித் ‘தமிழ்’ என்று உச்சரிக்கக் கூட தார்மீக உரிமை இல்லை.

வரலாற்றில் இப்படி எத்தனையோ அடக்குமுறைகளால் புடம் போடப்பட்டு, அடக்குமுறைகளை எதிர்ப்பதில் முன்கள வீரர்களாக நிற்பவைதான் தமிழ்நாடும் தி.மு.கழகமும். இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்கள், எமது மொழி அடையாளத்தைக் காப்பது என இந்தித் திணிப்பின் கொடும்புயலை எதிர்கொண்டவர்கள் நாங்கள். மீண்டும் அசைக்கமுடியாத உறுதியுடன் அதனை எதிர்கொள்வோம்.

இந்தி காலனியாக்கத்துக்கு எதிரான தீ மீண்டும் ஒருமுறை பரவுகிறது. எமது அடையாளத்தை அழித்து இந்தியை முன்னிறுத்தும் பா.ஜ.க.வின் முயற்சிகள் உறுதியோடு எதிர்க்கப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆதீர் ரஞ்சன் சவுத்ரி இடைநீக்கம் அதிர்ச்சி அளிக்கிறது!

# மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் இடைநீக்கம் இதுவரை நடக்காதது!

## மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு - கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கடிதம்!

புதுடெல்லி, ஆக. 13-

நாடாளுமன்ற மக்களவை காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆதிர்ரஞ்சன் சவுத்ரி இடைநீக்கம் செய்யப்பட்டதை அடுத்து, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எழுதிய கடிதத்தில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, “தங்களின் (மக்களவை சபாநாயகர்) இச்செயல் அதிர்ச்சி அளிக்கிறது. மக்களவை எதிர்க்கட்சித் தலைவரை இடைநீக்கம் செய்வதென்பது இதுவரை நடந்திராத ஒன்றாகும். இந்த இடைநீக்க உத்தரவைத் தாங்கள் பிறப்பிக்கும் முன்னர் சற்று பொறுமை காத்திருக்கலாம்” என்று குறிப்பிட்டுள்ளார்.



மக்களவையில் 8.8.2023 முதல் நடைபெற்ற பா.ஜ.க. அரசுக்கு எதிரான ‘நம்பிக்கை இல்லாத்தீர்மானத்தின்’ மீதான விவாதத்துக்கு 10.8.2023 அன்று பிரதமர் மோடி பதில் அளித்தார்.

அதன் பின்னர், ஒழுங்கற்ற நடத்தை மற்றும் அவை நடவடிக்கைகளுக்கு திரும்பத் திரும்ப இடையூறு செய்ததாகக் குற்றம் சாட்டி மக்களவையின் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆதீர் ரஞ்சன் சவுத்ரியை நேற்று முன்தினம் மாலை அவையில் இருந்து இடைநீக்கம் செய்து மக்களவைத் தலைவர் உத்தரவிட்டார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அவர்களுக்கு நேற்று கடிதம் எழுதினார்.

அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

நேற்று மக்களவை காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆதீர் ரஞ்சன் சவுத்ரி அவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டது தொடர்பாக இக்கடிதத்தை எழுதும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளேன்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்கு பிரதமர் மோடி அவர்கள் பதிலுரை அளித்தபோது மக்களவையில் என்ன நடந்தது என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

எதிர்க்கட்சி வரிசையில் இருந்த நாங்கள் பிரதமரிடம் ஒரு விளக்கம் கேட்க முனைந்தோம். ஆதீர் ரஞ்சன் சவுத்ரி உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் எழுந்து நின்று, ‘நாங்கள் என்ன சொல்கிறோம் என்று ஒரு நிமிடம் செவிமடுக்க வேண்டும்’ என வேண்டுகோள் வைத்து நின்று கொண்டு இருந்தோம். ஆனால், பிரதமர் எங்கள் கோரிக்கையை சற்றும் ஏற்கவில்லை. அது அவரது எதிர்க்கட்சித் தலைவர்கள்மீதான அக்கறையற்ற, பொருட்படுத்தாத மனோபாவத்தைப் பிரதிபலித்தது.

அந்த நேரம் அவைத் தலைவரான தாங்கள் அவையில் ஆளும் தரப்பை நோக்கி பார்த்தபடியே இருந்தீர்கள். எதிர்க்கட்சிகளின் பக்கம் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

மாலையில் அனைவரும் ஆச்சரியம் கொள்ளும் விதமாக ஆதீர் ரஞ்சன் சவுத்ரி மக்களவையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தி கிடைத்தது. இந்த நடவடிக்கை துரதிர்ஷ்டவசமானது மட்டுமல்ல, இதுகாறும் நடந்திராததும் கூட. ஆளும் பா.ஜ.க. அரசு எதிர்க்கட்சித் தலைவரை இடைநீக்கம் செய்யும் இந்த அளவுக்குக் கோரிக்கை எடுத்துச் சென்றுள்ளது என்பது வேதனை அளிக்கிறது.

மதிப்பு மிக்க நாடாளுமன்ற மரபுகள் மீது பா.ஜ.க. கொண்டுள்ள சகிப்புத்தன்மையும் நியாயமும் அற்ற மனோபாவத்தினால் தாங்களும் உந்தப்பட்டு இருப்பது எங்கள் கவலையை மேலும் அதிகரிக்கச் செய்கிறது.

மக்களவையின் நடப்பு அமர்வில் ஆளும் தரப்பு மற்றும் எதிர்க்கட்சி வரிசை என இரு பக்கங்களிலும் இறுக்கமான சூழல் நிலவிய நிலையிலும் அவைத் தலைவரான தாங்கள், தங்களுக்கே உரிய சிறப்பான முறையில் பொறுமை காத்து அவையை பாராட்டுக்குரிய நல்ல முறையில் நடத்தி வந்தீர்கள். ஆனால், அவை அமர்வின் இறுதிக்கட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரை இடைநீக்கம் செய்தது அதிர்ச்சி அளிக்கிறது.

இருப்பினும், அவைத் தலைவரான தாங்கள், காங்கிரஸ் கட்சியின் மக்களவைத் தலைவரான ஆதீர் ரஞ்சன் சவுத்ரி அவர்களை இடைநீக்கம் செய்யும் உத்தரவைப் பிறப்பிக்கும் முன்னர் ஒரு நொடி சற்றே கூடுதல் பொறுமை காத்திருக்கலாம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் டி.ஆர்.பாலு குறிப்பிட்டுள்ளார்.

---

தலைமை டி.கே.டி.மு.நாகராஜன், வரவேற்புரை பொ.ஆனந்த்

# முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா பட்டிமன்றம்!

## மதுரை முத்து - க.செல்வராஜ் எம்.எல்.ஏ., - மேயர் ந.தினேஷ்குமார் பங்கேற்பு!

*திருப்பூர், ஆக.13-*

*திருப்பூர் வடக்கு மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகர் 51 வது வட்ட கழகத்தின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, முத்தமிழ் அறிஞரின் நீடித்த புகழுக்கு காரணம் அவரது கலைப்பணியா, அரசியல் பணியா என்கிற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் இன்று (13.08.2023 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில் திருப்பூர் காட்டுவளவு, ஆர்.வி.ஈ லே அவுட்டில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டிகேடிமு.நாகராஜன் தலைமையில், வட்டக் கழக செயலாளர் பொ.ஆனந்த் வரவேற்புரையில் வடக்கு மாவட்ட இளைஞர் அணி செ.திலக்ராஜ், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாவட்ட அமைப்பாளர் கோ.ஆனந்தன், கருவம்பாளையம் பகுதி அவைத்தலைவர் தம்பி ப.குமாரசாமி, 52வது வட்ட கழக செயலாளர் மு.நந்தகோபால், தெற்கு மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.அசோக்குமார், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தலைவர் ப.ரத்தினசாமி, விஜய சிம்ம ராஜா, சண்முகராஜா, வை.கணேசன், ந.நாகராஜ், பஞ்சலிங்கம், ஆர்.பழனிச்சாமி, எஸ்.சந்தோஷ்குமார், எஸ்.கன்னியப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. இதில் முத்தமிழ் அறிஞரின் நீடித்த புகழுக்கு காரணம் அவரது கலைப்பணியா, அரசியல் பணியா என்கிற தலைப்பில் சன் டிவி, விஜய் டிவி கலக்கப்போவது யாரு புகழ் மதுரை முத்து, மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு செல்வராஜ் எம்.எல்.ஏ., மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். தி.பொ.குமார் நன்றியுரை யாற்றுகிறார்.*

---



(1948 - 2001)

22ஆம் ஆண்டு நினைவு நாள்



முன்னாள் சைதை சட்டமன்ற உறுப்பினர்
தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர்

**வை.பெருமாள்**

அவர்களின் 22ஆம் ஆண்டு நினைவேந்தல்

பொதுவாக அவருடைய வடிவம்
ஆஜானுபாகுவான உருவம்,
புராணீக பாஷையிலே
சொல்ல வேண்டுமென்றால்,
திராவிட முன்னேற்ற கழகத்தின் பீமசேனன்
வை.பெருமாள் என்று சொன்னால்
அது மிகையாகாது.
அந்த உருவமா சாய்ந்துவிட்டது என்று நானும்
எண்ணியெண்ணிப் பார்த்தேன்,
ஏங்கியேங்கித் தவித்தேன்

– தலைவர் கலைஞர் (4.11.2003 முரசொலி)

*என்றும் உங்கள் வழியில்*

**பா.நவலடி ராஜா** MCA., LLB..,
மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்
நாமக்கல் மேற்கு மாவட்டம்

ARASU ARTS